# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண்.39 /2015**

திரு. P. ஜார்ஜ்,
69/45, கந்தசாமி புரம் ரோடு,
இராஜமணியபுரம் – 628 202,
ஆறுமுகநேரி,
திருச்செந்தூர் வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம். ........மேல் முறையீட்டாளர்

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131, 132, எட்டயபுரம் ரோடு,
தூத்துக்குடி – 628 001. ......... எதிர்மனுதாரர்

**ஆணை நாள் : 30–10–2015**

1. திரு. P. ஜார்ஜ், இராஜமணியபுரம், திருச்செந்தூர் வட்டம், அவர்களிடமிருந்து 23.4.2015ல் பெறப்பட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.39/2015 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர் அவரின் சுற்றுசுவரை ஒட்டி போதிய இடைவெளியின்றி நிறுவப்பட்டுள்ள டிரான்ஸ்பார்மரை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க வேண்டும் என்று மேல்முறையீடு செய்துள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டின் நகல் மேற்பார்வை பொறியாளர்/தூத்துக்குடி மின்பகிர்மான வட்டத்திற்கு பதிலுரை சமர்ப்பிக்கும்படி 27.4.2015 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. மேற்பார்வை பொறியாளர்/தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய பதிலுரையை தன்னுடைய 9.5.2015 நாளிட்ட கடிதத்துடன் இணைத்து அனுப்பியுள்ளார்.

5. மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகிய இருவரும் தங்களதுதரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 3.8.2015ல் மின்குறைதீர்ப்பாளர் முன்பாக கேட்புரை நடத்தப்படும் என்று இருதரப்பினருக்கும் 20.7.2015 நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்படடது.

6. ஆனால், மனுதாரர் இறந்துவிட்டார் என்ற காரணத்தினால் மேல்முறையீட்டாளருக்கு விலாசமிட்டிருந்த கடிதம் தபால்துறையினரால் மின்குறைதீர்ப்பாளர் அலுவலகத்திற்கு திரும்ப அனுப்பப்பட்டு விட்டதால் மேற்கண்ட கேட்புரை ரத்து செய்யப்பட்டு விட்டது.

7. இதற்கிடையில் மேல்முறையீட்டளாரின் மகளான திருமதி. ஜா. எபனேசர் எப்ஸிபாய், அவர்கள் திரு. P. ஜார்ஜ், அவர்கள் 16.6.2015 அன்று இறந்துவிட்டார் என்பதற்கு ஆதாரமாக இறப்பு சான்றிதழின் நகலை இணைத்து மேல்முறையீட்டை அவரின் பெயருக்கு மாற்றிதரவேண்டும் என்று 31.7.2015 நாளிட்ட கடிதம் மூலம் கோரியுள்ளார்.

8. திருமதி. எபனேசர் எப்ஸிபாய் அவர்களிடம் திரு. P. ஜார்ஜ், அவர்களின் வாரிசுதாரர்களின் வாரிசு சான்றிதழ் மற்றும் மற்ற அனைத்து வாரிசுதாரர்களிடமிருந்து திருமதி. எபனேசர் அவர்களை மேற்கண்ட வழக்கில் மேல்முறையீட்டாளராக மாற்றுவதற்கு சம்மதம் தரும் ஒப்புதல் கடிதத்தையும் சமர்ப்பிக்கும்படி 12.8.2015 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டது.

9. ஆனால், திரு. எபனேசர் எப்ஸிபாய் அவர்களிடமிருந்து இதுநாள்வரை திரு. P. ஜார்ஜ், அவர்களின் வாரிசுதாரர்கள் யார் என்பதை தெரியப்படுத்தும் வாரிசு சான்றிதழ் மற்றும் திரு. P. ஜார்ஜ், அவர்களின் வாரிசுதாரர்களின் அனைவரும் திருமதி. ஜா. எபனேசர் எப்ஸிபாய்

அவர்களை மேல்முறையிட்டு மனுதாரராக மாற்றுவதற்கு சம்மதம் என்ற ஒப்புதல் கடிதத்தையும் சமர்ப்பிக்கவில்லை.

10. வாரிசு சான்றிதழ் மற்றும் ஏனைய வாரிசுகளின் ஒப்புதல் கடிதத்தையும் சமர்ப்பிக்க தெரிவித்து சுமார் 2 ½ மாதங்கள் கடந்த பின்பும் மேற்கண்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் மேல்முறையீட்டு மனு எண்.39/2015 இன் மேல்முறையீட்டாளராக திருமதி. எபனேசர் எப்ஸிபாய் அவர்களை மாற்றவேண்டும் என்ற கோரிக்கை பரிசீலிக்க முடியவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது. மேலும், மேல்முறையீட்டாளர் காலமாகி விட்டார் என்பதால் மேல்முறையீட்டு மனு எண்.39/2015 தள்ளுபடி செய்யப்படுகிறது என்றும் தீர்வு செய்யப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. P. ஜார்ஜ்,
69/45, கந்தசாமி புரம் ரோடு,
இராஜமணியபுரம் – 628 202,
ஆறுமுகநேரி,
திருச்செந்தூர் வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம்.

2) மேற்பார்வை பொறியாளர்,
தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131, 132, எட்டயபுரம் ரோடு,
தூத்துக்குடி – 628 001.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
131, 132, எட்டயபுரம் ரோடு, தூத்துக்குடி – 628 001.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.